# எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க



அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

அனுப்புனர் : Thulasiram / mdu_trj@sancharnet.in

பெறுநர் : sakthi.chennai@rmy.sril.in

ஸ்ரீ அரவிந்தர் ஆஸ்ரமவாசியான திரு. துளசிராம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் பிரார்த்தித்து வேண்டுவது :

வரும் எதிர்கால நோக்கில் இந்த 3வது உலக சமரச சுத்த சன்மார்க்க மகாநாட்டில் நிறைவேறும் தீர்க்கமான தீர்மானங்களும் கருத்துக்களும் செயல்பாடுகளும் வெற்றியுடன் அமையட்டும் : இரண்டு நோக்கங்கள் உள்ளன.

1. வள்ளலாருடைய கோட்பாடுகளை நாம் எந்த அளவுக்கு பல்வகை தகவல் தொடர்பு

சாதனங்களின் வாயிலாகவும் இதர வகையான நேரடி மக்கள்மேடைகள் மூலமும் பரப்பி உள்ளோம்.

2. உலக முழுமையும் பேராண்டவரின் அருளரசாட்சிக்கு கொண்டு வருவதற்கு வள்ளலார் எவ்விதம் செயல்பட்டு நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளார் என்பது சன்மார்க்கிகள் உள்பட நாம் எல்லோரும் அறிந்து கொள்ளவில்லை.
அவர் நிறைவேற்றியுள்ள வழிமுறைகளாவன :

1. வள்ளலார் மூலம் பேரிறைவன் இப்பூமியில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராக பரிணமித்து நிரந்தரமாக வடலூரில் 1874ம் வருடம் ஜனவரி 30ம் தேதி முதலாக வீற்றிருக்கிறார்.

2. தாம் வாக்களித்தபடி வள்ளலார் 1874 முதலாக எல்லா மனித உடம்புகளில் புகுந்து கொண்டு எல்லா மனித உடம்பின் சுற்றுச்சூழலில் செயலாற்றும் அருட்சக்தியை கொண்டு வந்துள்ளார்.

3. 1945ம் வருடம் முதலாக உலக ஐக்கிய நாடுகள் சபையில் (UNO) வள்ளலார் இன்னும் அதிகமான அருட்சக்தியை ஆளுகைக்கு கொண்டு வந்துள்ளார். வள்ளலார் தற்பொழுது உலகை ஆளும் வகையிலாக மனித வாழ்வின் எல்லா துறைகளிலும் செயல்பட ஐக்கிய நாடுகள் சபைகளிலும் அதன் நிறுவனங்களிலும் ஒலிம்பிக், மற்றும் சர்வதேச மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் அவருடைய நேரடியான அருட்சக்தியை கொணர்ந்து, உலக அரசியல், நிர்வாகம், சுகாதாரம், கலை, விஞ்ஞானம், கலாச்சாரம், கல்வி, தொழில், வியாபாரம், தகவல் தொழில் நுட்பக் கல்வி, சமூக நலம், மற்றும் இதற்கு எல்லாம் மேலாக மதங்களுக்கு அப்பாற்பட்ட ஆன்மீக ஒருமைப்பாட்டுடன் கூடிய உலக ஒருமைப்பாட்டுக்கு வழி வகுத்து நடத்துகிறார்.

4. இந்த 21வது நூற்றாண்டின் ஆரம்ப முதலாக மனித வாழ்வின் எல்லா துறைகளிலும் செயல்பட மக்களும் அவர்களைச் சார்ந்த எல்லா விஷயங்கள், நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் கூட்டு முறையாகவும் தனிநபர் முறையாகவும் ஆட்கொண்டு உலகை தனது அருளரசாட்சிக்குக் கொண்டு வந்துள்ளார். பேராண்டவரின் உயர்வர உயர்ந்த அருட்சக்தியானது தாம் சுயமாக அல்லது புதிதாக சிருட்டித்துக் கொண்ட நிரந்தரமாக வாழ்ந்து வரும் ஒளிர்விடும் புது இறவா தேகத்தில் இயற்கையாக அமைந்துள்ளது. அருட்ஜோதி ஒளிர்விடும் தேகம் தலை முதல் பாதம் வரையிலும், தலைக்கு மேலும் பாதத்திற்கு கீழும் உடம்பின் சுற்றுப்புற சூழலிலும் ஒளிர்விடுகிறது. முதலில் இருந்த தனது இறவா தேகத்தைக் கரைத்து எல்லா உடம்புகளில் புகுந்து கொண்டபின் சீக்கிரமாக அருட்ஜோதி ஒளிர்விடும் இப்புதிய தேகத்தை சிருட்டித்துக் கொண்டார்.

வள்ளலாரின் அருட்ஜோதி ஒளிர்விடும் புதிய தேகத்தை ஸ்ரீ அரவிந்த ஆஸ்ரமத்து அன்னையார் 1906 – 07லிலும், திரு. துளசிராம் 1981லிலும் தம் காட்சிகளில் பார்த்துள்ளனர்.

5. வள்ளலாரின் மேலோங்கிய அருளரசாட்சியின் அருட்சக்தியை எல்லா கோயில்களிலும், மசூதிகளிலும் சர்ச்சுகளிலும் இதர புனித தலங்களிலும் வியாபகஞ்செய்தும் அதை உணரும் வகையில் வியாபிக்கச் செய்தும் சிறப்பாக அவற்றின் கோபுரங்களிலும் கர்ப்பக்கிரகத்திலும் அதன் சன்னதியிலும் அலங்கரிக்கப்பட்ட பூஜை புஷ்பங்களிலும் மாலைகளிலும் விளங்கும்படி செய்துள்ளார். அதேவண்ணம் எல்லா மகத்தான புதிய, பழைய ஆஸ்ரமங்களிலும் அவற்றை தோற்றுவித்த ஆன்மீக மகான்களிலும் அவர்களின் படங்களிலும் விக்கிரகங்களிலும் விளங்கும்படி கொண்டு வந்துள்ளார்.

இதன் மூலமாக பொதுவாக எல்லா பக்தர்களுக்கும் அவர்களின் மனதிலும், உடம்பிலும் சிறப்பான அருட்சக்தி வழங்கிக் கொண்டு வருகிறார்.

மேற்சொன்ன கண்டுபிடிப்புகளும் நிகழ்ச்சிகளும் ஆன்மீக அருட்சக்தி உணரும் அளவை ஒப்பிட்டுப்பார்த்து நிரூபிக்கப்படக்கூடியவை.

1. மேற்சொன்ன ஒப்பிடும் நிகழ்ச்சிகள், ஒப்பிடும் மகான்கள், தனி நபர்கள் அல்லது புனித தலங்கள் இவைகளின் படங்களைப் பார்த்தும் சத்யஞான சபை படத்துடனும், வள்ளலாரின் சாதாரண படத்துடனும் அருட்சக்தி ஒளிர்விடும் வள்ளலார் படத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தும் தெரிந்து கொள்ளலாம்.

2. மேற்சொன்ன படங்களின் சக்திகளை பத்திரிக்கைகளிலும், தொலைக்காட்சி, மற்றும் கணிப்பொறித்திரை மூலம் ஒப்பிட்டுப் பார்த்தும் தெரிந்து கொள்ளலாம்.

3. மேற்சொன்ன படங்களின் சக்திகளை அவற்றைத் தொட்டும் அப்படங்களின் மூலம் ஆன்மீக சக்தியை ஏற்றிய காந்தக் கற்களைத் தொட்டும் ஒப்பிட்டு உணரலாம்.

ஆகவே வள்ளலாரின் மேலோங்கி வளர்ந்த அருளரசாட்சியில் அவருடைய கோட்பாடுகளான அருள், அன்பு, கருணை மனித இனத்தின் ஆன்மநேய ஒருமைப்பாடும் உலகு முழுவதும் பரப்புவதற்கு நமக்கு அவர் உறுதுணையாக இருக்கிறார். இந்த நோக்கத்திற்காக வள்ளலாரின் தலை முதல் பாதம் வரை சூழ்ந்துள்ள அருட்ஜோதி ஒளிர்விடும் புதிய தேகத்தின் படம் – திரு. துளசிராம் மற்றும் ஸ்ரீ அன்னை தங்கள் காட்சிகளில் கண்டவாறு வெளியிட வேண்டியது மிக அவசியம்.

எல்லோருக்கும் எமது அன்பு

**டி.ஆர். துளசிராம்**

ஸ்ரீ அரவிந்தர் ஆஸ்ரமம், பாண்டிச்சேரி.

அனுமதியுடன் தமிழாக்கம் :

டி.ஆர். ஜவஹர்லால்